1995 ஏப்ரல் 21]

தட்டுப்பாடு இல்லாமல் எங்கள் மாவட்டத்தைக் கவனிக்க வேண்டும். காரணம், இதற்கு முன்னாலே எல்லாம் கன்னியாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டு இருந்தது. புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான் கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு என்ன என்ன தேவை என்று அறிந்த உடனேயே செய்து கொடுக்கின்றார்கள். ஆகையால், அந்த ஏழையெளிய மக்களுக்கு இதுபோன்று உதவிகளைச் செய்து கொடுப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *383*, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கு. சிவசுப்பிரமணியன் கேட்கிறார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

383—

திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையை நவினப்படுத்துதல்

**38552—*திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்கால ஆட்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறையிலே பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தற்போது திருக்கோவிலூரில் உள்ள அரசு மருத்துவமனை நல்ல நிலையில் இருந்தாலும்கூட, அதை

நவீனப்படுத்துவது அவசியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், திருக்கோவிலூரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கு அதுதான் நகர்ப் பகுதியாக விளங்குகிறது. கிராம மக்கள் பலரும் அங்கு வந்து போகின்ற நிலை உள்ளது. எனவே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கருத்திலே கொண்டு, அந்த மருத்துவமனையை நவீனப்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே சில வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த மருத்துவமனையிலே மொத்த படுக்கைகள் எண்ணிக்கை 62 ஆக உள்ளது. அதற்கேற்ப என்னென்ன வசதிகள் தேவையோ அந்த வசதிகள் எல்லாம் ஏற்கனவே செய்து கொடுக்கப்பட்டுள்ளன. கூடுதலான வசதி தேவை என்று குறிப்பிட்டு எழுதப்படுமேயானால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 384, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

384—

அத்திக்குட்டைக்கு பேருந்து இயக்குதல்

*35665—**டாக்டர் மு. சீனியம்மாள்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம், அத்திக்குட்டைக்கு சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 19-6-1994 முதல் சேரன் போக்குவரத்துக் கழகத்தால் இப்பகுதியில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-10

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில்